1981 ஜனவரி 3]

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: அதற்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்திலே நான் ஒன்று அறிந்து கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களோ அல்லது அவர் சார்ந்திருக்கிற கட்சியோ......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விக்கு மட்டும் அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். உறுப்பினரிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவதையெல்லாம் இப்பொழுது கேட்க வேண்டாம், தனியாக வெளியிலே, லாபியிலே வைத்துக்கொள்வது நல்லது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே பலமுறை இந்த மன்றத்தில் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். அரசின் சார்பிலே எந்த, எந்தத் துறைகளில் எல்லாம், பொதுத் துறையிலோ அல்லது கூட்டுத் துறையிலோ ஆரம்பிக்க முடியுமோ அதிலே எல்லாம் அரசு ஆரம்பிக்கத் தயாராக இருக்கிறது. அதைப்போலவே தனியார் களையும் ஊக்குவித்து; தொழில் வளர்ச்சி வேகமாகப் பரவ வேண்டுமென்ற நோக்கத்தோடு, தனியார்களுக்கும் முடிந்த அளவுக்கு ஊக்கம் கொடுத்து, தனியார் துறையிலேயும் அதிகமான தொழில்கள் தமிழகத்திலே வளரவேண்டுமென்றுதான் இந்த அரசு விரும்புகிறது.

திருப்பூர் நகரில் கூட்டுறவு நூற்பாலை

*வினா எண் 118-திரு. ஆர். மணிமாறன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் அது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, 25,000 ஸ்பிண்டில் இருக்கும்படியாக ரூ. $6\frac{1}{2}$ கோடி அளவில் அந்தக் கூட்டுறவு நூற்பாலைக்கான பிராஜக்ட் ரிப்போர்ட் தயாரிக்கப் பட்டு, அரசினுடைய பார்வைக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் அனுப்பப்பட்டிருப்பதாக அறிகிறேன். மிக விரைவாக அந்தக் கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்துவதன்வாயிலாக ஏறத்தாழ 1,000 தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும்படியான நல்ல சூழ்நிலை அங்கே ஏற்படும். ஆகவே, துரிதமாகச் செயல்படுத்த அரசு முனையுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1981 ஜனவரி 30

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, திருப்பூரில் பனியன் தயாரிப்பதற்கான நூல் தயாரிக்க, நூற்பாலை ஒன்றை கூட்டுறவுத் துறையிலே நிறுவுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கிருந்து ஒரு ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறார். அதுவும் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. நான் ஏற்கனவே சொன்னதைப் போல், கூட்டுறவுத் துறையிலே மாவட்டந்தோறும் என்ற அடிப்படையில், கூட்டுறவு நூற்பாலை இன்னொன்றும் அமைப்பது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 2,000 பனியன் தொழிற்கூடங்களுக்கு மேல் அங்கே யிருக்கிற காரணத்தினால் பனியன் நூலுக்கு உண்டான தட்டுப்பாடுகள் அடிக்கடி ஏற்பட்டுவிடுகின்ற காரணத்தினால் அங்கே தொழிலாளர்களுக்கு வேலையின்மை போன்ற பரிதாபமான சூழ்நிலையெல்லாம் அடிக்கடி அங்கே ஏற்பட்டு விடுகிறது. எனவே, அரசினுடைய பரிசீலனையிலே இருக்கும் அது பனியன் நூலைத் தயாரிப்பதற்காக மாத்திரம் என்ற முறையிலே, அந்தக் கூட்டுறவு நூற்பாலை அமைக்கப்படுமா? அல்லது, அதிலே ஏதாவது மாற்றம் இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-10]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மாமன்ற உறுப்பினர், பனியன் தொழிற்சாலை அதிகம் நிறைந்திருக்கிற அந்த திருப்பூர் தொகுதி உறுப்பினராக இருக்கிற காரணத்தினால் அவர் சொல்லுகிற அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, பனியன் தயாரிப்பதற்கு தேவைப்படுகின்ற நூலைத் தயாரிக்கின்ற நூற்பு ஆலையாக அந்த ஆலை அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: ஸ்பீக்கர் சார், இந்தக் கூட்டுறவு நூற்பாலைகளை அமைக்காமல் தனிப்பட்ட முறையிலே ஆரம்பிக்க தனிப்பட்டவர்களுக்கு அனுமதி வழங்கி இருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் ஏற்கனவே சொன்னார்கள். இதுவும் கூட்டுறவு நூற்பாலையாக இருக்கிற காரணத்தால் என்னுடைய கேள்வியைப் போடுகிறேன். பொதுவாக கைத்தறிகளுக்கு நூல் விலை ஏறுகிறபோது தனிப்பட்ட ஆலைகளில் இருந்து நூல் கொடுப்பது இல்லை. என்னதான் அரசாங்கத்தினுடைய டெக்ஸ்டைல் கமிஷனர்களும், ஹாண்ட்லூம் கமிஷனரும் சொன்னாலும் தனிப்பட்ட மில் முதலாளிகள் அந்த நூலை விலை ஏறுகிற சமயத்தில் கைத்தறிக்குக் கொடுக்க மறுக்கிறார்கள். அந்த சமயத்தில் கூட்டுறவு ஆலைகள்தான் கைத்தறிகளுக்கு உதவ முன்வருகின்றன. ஏனென்றால் நம்முடைய

நிர்வாகத்திலே, கட்டுப்பாட்டிலே இருக்கிற காரணத்தினாலே அந்த நூல்களை பெரும்பகுதி, தனிப்பட்ட மில்கள் கொடுக்க வில்லை என்றாலும், கைத்தறிகளுக்குச் சென்று போகின்ற காரணத்தால் ஆரம்பிக்கின்ற புதிய நூற்பாலைகளை ஏன் கூட்டுறவுத் துறையில் ஆரம்பிக்காமல் தனிப்பட்ட முறையிலே அரசாங்கம் ஊக்குவிக்க வேண்டும். அதனாலே கைத்தறிகளுக்கு இடைஞ்சல்கள் ஏற்படாதா என்பதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவேண்டும் என்று கேட்கவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, நூல்கள் விநியோகத்திலே மட்டுமல்ல அல்லது நூல் உற்பத்தியிலே மட்டுமல்ல, அவை எந்தத் தொழிற்சாலைகளாக இருந்தாலும் அந்தத் தொழிற்சாலைகளிலே உற்பத்தியாகிற எந்தப் பொருளாக இருந்தாலும் விநியோகிப்பதிலே கஷ்டம் இருக்கிற காரணத்தினாலும் இத்தகைய தனியார் துறைகளை முழுமையாக மூடிவிட்டு அத்தனையும் அரசுத் துறையிலே அல்லது பொதுத்துறையிலே அல்லது ஜாயின்ட் செக்டாரிலே ஆரம்பிப்பது என்பது நிச்சயமாக இயலாது. ஏனென்றால் அரசினுடைய நிதி மற்ற வசதிகளைப் பொருத்துத்தான் அரசுத் துறையிலே தொழிற்சாலைகளைத் துவங்க முடியும். எனவேதான் பரவலாக, நான் ஏற்கனவே கூறியதைப் போல, அரசாங்கத் துறையானாலும் சரி, பொதுத்துறையானாலும் சரி, அல்லது ஜாயின்ட் செக்டராக இருந்தாலும் சரி, அதைப்போலவே தனியார் துறையாக இருந்தாலும் சரி விண்ணப்பங்கள் வருகின்ற போது அவைகளுக்கும் பரவலாக அனுமதி வழங்கப்படுகிறது.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் தனியார்களுக்குச் சொந்தமாக டஞ்சாலைகள் அதிகமாக இருக்கிற காரணத்தினாலே, பனியன் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கிற காரணத்தினாலே, கூட்டுறவு ஆலைகளை, பனியன்களை உற்பத்தி செய்யக்கூடிய நூல்கள் தயாரிக்கின்ற தொழிற்சாலையை திருப்பூரில் நிறுவுவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். திருப்பூருக்கு அண்மையில் உள்ள அவனாசி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கிற காரணத்தினாலும், தொழில் வளர்ச்சியே இல்லாத காரணத்தினாலும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது திருப்பூரைப் பற்றிய கேள்வி. அவினாசியைப் பற்றி தகவல் தேவையானால் தனிக் கேள்வி போடுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டையும் திருப்பூரில் ஆரம்பிக்கப் போவதாக நான் சொல்லவில்லை. இரண்டும் ஆய்வுக்கு வந்திருக்கின்றன. இதிலே அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல ஆரம்பிக்கின்ற கூட்டுறவு நூற்பாலை பனியன் தயாரிக்கின்ற

நூல்களைத் தயாரிப்பதற்கான நூற்பாலையாக இருக்கும் என்று தான் நான் சொன்னேன். மற்ற இடங்களில் இருந்து ஏதாவது கோரிக்கைகள் வருமானால், பின்னால் அரசின் பரிசீலனையிலே நிச்சயமாக எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோவை மாவட்டத்தில் கூட்டுறவு நூற்பாலை உருவாகும் என்று சொன்னார்கள். திருப்பூரில் ஆரம்பிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். அதை எவ்வளவு ரூபாய் செலவில் ஆரம்பிப்பதாக இருக்கிறார்கள்? அப்படி ஆரம்பிப்பதால் திருப்பூர் நகரத்தில் உள்ளவர்களுக்கு எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே திரு. மணிமாறன் அவர்கள் கேள்வி கேட்டபோது, அதுபற்றிய புள்ளிவிவரங்களை தாமே கொடுத்துக் கேட்டார்கள். அவற்றை அமைச்சர் சொல்லட்டும் என்று கூட எதிர்பார்க்கவில்லை. மூலக் கேள்வியையொட்டி துணை வினா கேட்கிற உறுப்பினர்கள் முன்னால் போடப்பெற்ற துணை வினாக்கள், அளிக்கப் பெற்றுள்ள பதில்கள் ஆகியவற்றை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். அப்போதுதான் முன்னால் கேட்கப்பெற்றுவிட்ட வினாவையே திரும்பவும் கேட்காமல் தவிர்க்க முடியும்.

விளாத்திகுளம் தொகுதியில் கூட்டுறவு நூற்பாலை.

*வினா எண் 119—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதியில் கூட்டுறவு நூற்பாலை தொடங்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) இல்லை.

(ஆ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, விளாத்திகுளம் பகுதி நெல்லை மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதி, அந்தப் பகுதியில் தொழில் வளத்தைப் பெருக்குவதற்காக, அரசு தனிக்கவனம் செலுத்தி, அந்த விளாத்திகுளம் பகுதியில் அந்தக் கூட்டுறவு நூற்பாலையைத் துவங்க முன் வருமா? அது மட்டுமல்லாமல், அதற்கு பாரதி கூட்டுறவு நூற்பாலை என்று பெயர் வைக்க முன் வருமா?

(விடை இல்லை)